செய்தித் தாளாகப் பதிவுபெற்றது. வெள்ளிக்கிழமைதோறும் வெளிவருவது.

உ
சிவமயம்

# இந்துசாதனம்

சைவபரிபாலன சபை வெளியீடு.

பிரதி விலை: சதம் 20

ஆரம்பம்: விரோதி ஞு (1889) ஆவணிமீ 28-ம் உ அச்சகம்: சைவப்பிரகாச அச்சியந்திரசாலை, 450, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 356

புத்-அசூ] யாழ்ப்பாணம்:- ஆனந்த ஞு ஆனிமீ கச-உ வெள்ளிக்கிழமை (28-6-1974) [இல: கஉ

அணிந்துரை அரங்கம்

# ஆறுமுக நாவலரின் கல்விப் பணிகள்

ஆசிரியர்: கலாநிதி
ச. தனஞ்சயராசசிங்கம்
வெளியீடு:
ஆறுமுகநாவலர் சபை, 1974

பத்தொன்பதாம் நூற்றாண்டில் இலங்கையில் அன்றைய ஆங்கிலேயராட்சியின் முழுமையான ஆதரவைப் பெற்றுக் கிறித்தவ - ஆங்கிலக் கல்வியமைப்பு அடைந்த வளர்ச்சி நாட்டு மக்களின் சமய - பண்பாடு விழுமியங்களைப் போற்றிய பௌத்தக் கல்வியமைப்பிற்கும், சைவக் கல்வியமைப்பிற்கும் ஊறுகள் பல விளைத்தது. பௌத்தர்களின் பிரிவேனைக் கல்வியும். சைவர்களின் திண்ணைப் பள்ளிக்கல்வியும் நன்கு ஒழுங்கமைதிபெற்ற கிறித்தவ - ஆங்கிலக் கல்வியுடன் போட்டியிட்டு வெற்றிகாண இயலவில்லை. எனவே, கிறித்தவர்களான ஆங்கிலேயர்கள் ஆட்சிபீடத்தில் அமர்ந்து ஆங்கிலக் கல்வியமைப்பிற்கு அளித்த பல்திற உதவிகள் நாட்டு மக்களின் சமய, பண்பாட்டுக் கல்வி மேம்பாட்டைக்காண விரும்பிய பெருமக்கள் சிலரின் எண்ணத்தையும் செயல் வன்மையையும் மறுமலர்ச்சிப் பணிகளிலே திருப்பின. கல்வியைச் சிங்களப் பௌத்த மறுமலர்ச்சிக்குரிய ஆற்றல்மிக்க கருவியாகப் பயன்படுத்தத் தென்னிலங்கையில் அநகாரிக தர்மபாலா வழிகோலினர். அவ்வாறே வட இலங்கையில் அத்தகைய மறுமலர்ச்சிக்காக ஆறுமுக நாவலர் தோன்றினர். இவ்வாறு தோன்றிய நாவலர் கல்வி மூலம் காண விரும்பிய மறுமலர்ச்சி இலங்கையின் கல்வி வரலாற்றிற் சிறப்பிடம்பெறும் தகமைசான்றது.

கலாநிதி ச. தனஞ்சயராச சிங்கம் அவர்கள் "ஆறுமுக நாவலரின் கல்வி நடவடிக்கைகள்" என்னும் பொருள் பற்றிய ஆங்கில நூல் "நாவலரின் பணிகள்" என்னும் நூலில் அவர் எழுதிய கல்வி வரலாற்று ஆய்வுரைப் பகுதியின் அடிப்படையில் நிகழ்ந்த பின் தொடராய்வின் பயனாக எழுதப்பட்டுள்ளது. கிறித்தவச் சமயப்பரப்பாளரின் கல்வி முயற்சியின் பகைப்புலத்தில் நாவலரின் மரபுவழிக் கல்விப் பணிகளை ஆராயும் இந்நூல், சைவத் தமிழ் மக்களின் கல்வி அவர்களின் பண்பாட்டின் தனித்தன்மையைப் பேணும்நோக்கில் அமைய நாவலர் இன்னல்கள் இடையூறுகட்கிடையே முயன்ற அருமைப்பாட்டை விளக்குகின்றது. கலைத்திட்டம், கற்பித்தல் முறைகள், பாட நூல்களின் தெரிவும் ஆக்கமும், பள்ளி நிருவாகம், பள்ளி சமுதாய உறவு நிலை, பள்ளியின் நிதிவசதி என்பன தொடர்பாக ஆங்கிலக் கல்வியமைப்பிற் பின்பற்றப்பட்ட அக்காலக் கோட்பாடுகளையும், நடைமுறைகளையும் தமது கல்வி முயற்சிகளில் ஏற்றவாறு இணைக்க நாவலர் முயன்றபோதும் அவை சைவத் தமிழ்ப் பண்பாட்டின் தனிப்பண்பை அரண் செய்யும் போக்கில் நெறிப்படுத்தப்பட்ட பாங்கினைக் கலாநிதி ச. த. தெளிவுபடுத்தியுள்ளார். நாவலரின் முயற்சி இலங்கைவாழ் சைவத் தமிழ் மக்களின் முன்னேற்றத்தை மட்டுமன்றி, தமிழகச் சைவத் தமிழ் மக்களின் கல்வி மேம்பாட்டையும், பண்பாட்டைப் பேணல் என்னும் அடிப்படையில் வகுத்ததலை இலக்காகக் கொண்டே அருமையும் விளக்கப்பட்டுள்ளது.

கிறித்தவ மதகுருவாக விரும்புவோர்க்குக் கிறித்தவ மதக் கோட்பாட்டுக் கல்வியும் பயிற்சியும் அளிக்கும் மதக் கல்விக் கல்லூரிகள் உள்ளன. அவ்வாறே சிவாலயங்களில் சைவக் குருவாகிச் சமயப் பணியாற்றுவோர்க்கும் மதக் கல்வியும் பயிற்சியும் தரவல்ல 'வேதாகம பாடசாலை' என்னும் உயிர் சமயக் கல்வி நிலையம் ஒன்றைச் சிதம்பரத்தில் அமைக்க நாவலர் விரும்பியமையும் விதந்துரைக்கப்பட்டுள்ளது.

மரபுவழி முதியோர் கல்வி நுன்முறைகளாகிய புராணப் பிரசங்கம், புராண படனம் என்பனமூலம் நாவலர் சைவத் தமிழ்க்கல்வியை வாழ்க்கைக் கலைக் கல்வியின் — தொடரும் கல்வியின் — உறுப்பாக்க முயன்ற பாங்கும் விளக்கப்பட்டுள்ளது.

பழைய எழுத்து மூலங்களை ஆவணக்களரியிலும் பிறவிடங்களிலும் தேடிப் பெற்று அவற்றைப் படித்துக் கலாநிதி ச. த. எழுதிய இவ்வாங்கில நூல் அன்னாரின் உழைப்புத் திறனையும் ஆய்வார்வத்தையும் ஆங்கில மொழியறிவுடைய அனைவர்க்கும் எடுத்துரைக்கின்றது. சிங்களப் பௌத்தக் கல்வி மறுமலர்ச்சியையும் சைவத் தமிழ்க் கல்வி மறுமலர்ச்சியையும் ஒப்புநோக்கி ஆராயும் முயற்சி மேற்கொள்ளப்பட இந் நூல் தூண்டுகோலாய் அமையின் கலாநிதி ச. த. அவர்களைப் போலவே, கல்வியில் ஈடுபாடுள்ள ஏனையோரும் பெருமகிழ்வுறுவரென்பது திண்ணம்.

வை. கா. சிவப்பிரகாசம் எம். ஏ.

## மகோற்சவம்

யாழ்ப்பாணம், வண்ணார் பண்ணைமேற்கு ஸ்ரீ விசுவேச விநாயகர் ஆலய மகோற்சவம் 25—6—74 முதல் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

3—7—74 அன்று காலை 7-45 மணிக்கு வசந்த மண்டப பூசையை அடுத்து 8-45 மணிக்கு இரதோற்சவம் ஆரம்பமாகும். 4-ம் திகதி தீர்த்தோற்சவமும், 5ம் திகதி பிராயச்சித்தஅபிடேகமும்நடைபெறும்.

## பெரியபுராணப் பெருவிழா

மெய்கண்டாராதீனத்தினதும், சைவ பரிபாலன சபைகளினதும் ஆதரவில் வண்ணை வீரமாகாளி அம்பாள் கோவில் மண்டபத்தில் 29-6-74 தொடக்கம் 5-7-74 வரை ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாசத் தம்பிரான் சுவாமிகள் தலைமையில் பெரியபுராணப் பெருவிழா நடைபெறும்.

சைவசமயப் பூஷணமாக விளங்கும் வேதசிவாகமச் சாரத்தையுட் பொருளாகக்கொண்டு இப் பெரிய புராண விரிவுரைகள் சிறந்த அறிஞர்களால் நடாத்தப்படும். மேற்படி கோவில் 15ம் நாள் உற்சவம் தொடக்கம் 27ம் நாள் உற்சவம் வரை தினமும் இரவு 9 மணி தொடக்கம் 10-30 மணிவரை நடைபெறும். அடியார்கள் விரிவுரையைக் கேட்டுப் பயனடைவார்களாக.

# கொல்லாவிரதம் ஓங்குக

திருமுறைச் செல்வமணி சி. க சிவபாலன்
(திருமுறை இசை ஆசிரியர், கொழும்பு விவேகானந்த சபை.)

தன்னலக் கலப்பில்லாத அன்பை அருள் என்று சொன்னார் வள்ளுவப் பெருந்தகை. அருளால் நிறைந்து ததும்புகிறவர்கள் எப்படியிருப்பார்கள், அவர்களுடைய வாழக்கைமுறை எவ்வாறு இருக்கும் என்பதை இந்த அதிகாரத்தில் விளக்குகிறார். இன்னொரு உயிருக்கு துன்பம் வந்தால் அருளாளர்கள் அதைச் சகிக்கமாட்டார்கள். நாமெல்லாம் நமக்கு அல்லது நம் குடும்பத்துக்குத் துன்பம் வந்தால் பதைபதைப்போம். அயலானுக்கு வந்த துன்பம் நம்மைப் பாதிப்பதில்லை. அருளாளர்கள் அப்படி இருக்கமாட்டார்கள். நாம் வாழும் இவ்வுலகத்திலே தொலை தூரத்துக்கப்பால் உள்ள ஒரு நாட்டில் ஓருயிர் அல்லலுறுகிறது என்று தெரிந்தால் அவர்களுக்கு உறக்கம் வராது. நமக்கு கொஞ்சங்கூட மனவேதனை ஏற்படுவதில்லை. எல்லாம் கருணையில்லாத காரணந்தான்.

உன் உடம்பைக் கொழுக்க வைப்பதற்காக இன்னொரு உடம்பைக் கொன்று, செய்யும், கடுதும் போட்டுத் தாளித்து உண்கிறாயே நீ, உனக்கெப்படி அருள் உண்டாகும்? என்று கேட்கிறார் தெய்வப்புலவர் திருவள்ளுவர்,

"தன்னூன் பெருக்கற்குத்
தான்பிறிதூ னுண்பான்
எங்ஙனம் ஆளும் அருள்".

உலக மக்கள் அமைதியாக, இன்பமாக வாழ வேண்டுமென்றால், ஒவ்வொருவரும் பிற உயிர்களை மதிக்காவிட்டாலும் துன்புறுத்தாமல இருந்தாலே அதை அறவினை என்று சொல்லலாம். அப்படிச் செய்யாமல, பிற உயிர்களைக் கொல்லுவோமானால், தின்பதற்காகவே கொல்லுவோமானால், பிற உயிர்களை அவமதிக்கும் குணமே நம்மிடம் வளர்ந்துபெருகும். பிறரை அவமதிப்பிலிருந்து முளைப்பவை தான் மற்றக் கெட்டகுணங்கள் எல்லாம்

"அறவினை யாதெனில்
கொல்லாமை கோறல்
பிறவினை எல்லாம் தரும்"

கொலைகாரன் வாழ்க்கைப் பிரச்சினைகளை ஈவு இரக்கம் இல்லாமல் அணுகுவான். ஆனால், கொல்லாமையை விரதமாக மேற்கொண்டவன் வாழ்க்கைப் பிரச்சனைகளைக் கருணையோடு, பரிவோடு, தியாக புத்தியோடு அணுகுவான். மனித வாழ்க்கை பகதிக்கும், வணக்கத்துக்கும் உரியது என்று அவன் எண்ணுவான். இப்பேற்பட்ட பக்தனை, தியாகியை உலகங்கள் எல்லாம் கைகூப்பித் தொழும் என்று உறுதியாக கூறுகின்றார் பொய்யாமொழிப் புலவர்,

"கொல்லான் புலாலை
மறுத்தானைக் கைகூப்பி
எல்லா உயிரும் தொழும்"

நான் கொல்லவில்லையே, மற்றவன் கொன்ற பிராணியின் புலாலைத் தானே விலைகொடுத்து வாங்கி உண்ணுகிறேன் என்று வாதம் செய்கிறோம் நாம். வள்ளுவரின் எதிர்வாதம் இது. "ஊன் தின்பதற்கு ஆள் இல்லையென்றால், அதை விற்றுப் பிழைப்பவர்களும் இல்லாமல் போய்விடுவார்கள்"

"தினற் பொருட்டால்
கொல்லாது உலகெனின்
யாரும்
விலைப் பொருட்டால்
ஊன் தருவார் இல்"

பொல்லாத ஆசாமி இந்த வள்ளுவர்! வாதத்தாலும் அவரை வெலல முடியாது.

## சிங்கள மக்களும் வழிபட்டனர்

கொழும்பு ஜிந்துப்பிட்டி முருகன் கோயிலில சென்ற பத்து நாட்களாக ஆறுமுகார்ச்சனை சிறப்பாக நடைபெற்றது. பல சிங்கள மக்களும் வழிபட்டனர். உதவி நிதியமைச்சர் திரு பெர்ணுட் சொயிஸா அவர்களும்வந்து தரிசனஞ் செய்து குருக்களிடம் விபூதிப் பிரசாதமும் சந்தனமும் பெறறு அணிந்து கொண்டனா. அமைச்சர் கலுகல்லேயின் புதல்விகள் வந்து தரிசனம் செய்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வியினுல் திருநீற்றின் மணமும் தவமணமும் சிவமணமும் பெருக வேண்டும்

துன்பக் கடலைக் கடக்க ஒரு எரு தோணி போன்றது திருவாசகம். அதனைப் பாடிய மாணிக்கவாசக சுவாமிகள் பாண்டி நாட்டில் அமாத்திருப் பிராமண குலத்தில் திருவவதாரஞ் செய்தனர். அவருக்குரிய பருவத்தில் திருநீற்றின் நறுமணமும், தவமணமும், சிவமணமும் உண்டாக வித்தியாரம்பஞ் செய்யப்பெற்றது. இககாலக் கல்வி இந் நோக்கங்களைக் கொண்டுள்ளதா வென்பது சிந்திக்கத் தக்கது. சிவபுராணம் முதலாக 600 திருவாசகச் செய்யுட்களைச் சுவாமிகள் பாடினர். திருக்கோவையார் 400 செய்யுட்கள் பாடினர். சிவபெருமான் ஒரு பிராமண வடிவங்கொண்டு திருவாசகம் திருக்கோவையார் செய்யுட்களை எழுதித் திருச்சிற்றம்பலத்தில் சேமித்து வைத்தனர். அடியார்கள் அவற்றுக்குப் பொருள் கூற வேண்டுமெனச் சுவாமிகளைக் கேட்க அவர் கனக சபை முன்பாகச் சென்று பொருள் கூறுகின்றேனென்று கூறி, எல்லாரையும் அங்கழைத்துச்சென்று திருவாசகம் திருக்கோவையார் ஆகியவற்றுக்குப் பொருள் இந்த நடராசப் பெருமானே என தமது விரலால் சுட்டிக் காட்டி பாலுடன் நீர் கலந்த தன்மை போல சிவத்துடன் இரண்டறக் கலந்தார்.

எல்லோரும் திருவாசகத்தைப் பக்தி சிரத்தையுடன் ஓதல்வேண்டுமென சைவப் பெரியார் திரு. சி. தம்பையா அவர்கள் 24-6-74 திங்கட்கிழமை சைவ பரிபாலனசபை ஆதரவில் சபை நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெற்ற மணிவாசகர் குருபூசைக் கூட்டத்தில் உரையாற்றினர். ஸ்ரீமத் ம. சுப்பிரமணியக் குருக்கள் கூட்டத்திற்குத் தலைமை வகித்தனர். ஆரம்பத்தில் நடராசப் பெருமானுக்கும் நால்வர் பெருமக்களுக்கும் விசேட பூசை நிகழ்ந்தது. அன்னம்பாலிப்புடன் கூட்டம் நிறைவெய்தியது.

---

# திருவாசகம் பிறவிப் பிணியை நீக்கும் மருந்து

பகவத் கீதை ஆண்டவனுல் தன் அடியவனுக்கு அருளப்பட்டது. திருவாசகமோ அடியவனுல் ஆண்டவனுக்கு அருளப்பட்டது. பெரியபுராணம் நாயன்மார்களின் புராணமெனவும், திருக்குறள் முப்பாலை விளக்கும் இலக்கியமெனவும் போற்றப்பட்டது. ஆனுல், திருவாசகமே தேன் எனப் போற்றிப் புகழப்பட்டது. திருவாசகத்தைக காலையும், மாலையும் பக்தியோடு படிதது வந்தால் மட்டுமே அத் தேனைச் சுவைக்கலாம்.

மேற்கண்டவாறு குருநாகல் சைவ மகாசபையில் 24-6-74 இல் நடைபெற்ற மணிவாசகர் விழாவில், "திருவாசகம்" என்னும தேன் பற்றிச் சிறப்புச்சொற்பொழிவாற்றிய வித்துவான பொன. அ. கனகசபை குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து பேசுகையில், அத்தேனை நோயாளி பருகி பிணி நீங்கலாம், சுகதேகி பருகிஞலும் கூடிய வலிமை பெறலாம், தியவர் பருகி நல்வழிப்படலாம், நல்லவர் பருகிஞலும் மேம்பாடடையலாம். திருவாசகம் வையகத்தில் வாழ்வாங்குவாழ உதவுவது, பிறவிப் பிணியைத் தீர்ப்பது. தேனைக் குடித்த தேனீ, அக் கிண்ணத்தில் விழுந்து இறந்து கிடந்தாலும் அதன் உடம்பு பழுதடையாது இருப்பது போல திருவாசகத் தேனைக் குடித்தால் நாமும் பக்குவ நிலையை அடையலாம். மறு பிறவி வராது"

வைத்திய கலாநிதி ஆ. சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்ற மணிவாசகர் குருபூசை விழாவில், குருநாகல மாவட்ட சேவைக் கால விஞ்ஞான ஆலோசகர் திரு. மு. இராமலிங்கம் திருமுறையோதினர்கள். மாணவர் பேச்சுப் போட்டியில் முதற் பரிசுபெற்ற குருநாகல் இந்து தமிழ் மகாவித்தியாலய மாணவர்கள் மாணிக்கவாசகர் பற்றி பேசினர்கள். அவர்களுக்கும் பரிசில்கள் வழங்கபபட்டன.

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்

வழ. இல. M B 10125

(1) காரைநகர் மேற்கு கனகசபை பாலசுப்பிரமணியம்
(2) பெண் தவநாயகி — வழக்காளிகள்

எதிராக

(1) முருகேசு தம்பையா காரைநகர் மேற்கு
(2) வேலுப்பிள்ளை விக்னேஸ்வரன் — பெண
(3) தங்கம்மா, காரைநகர்
(4) கதிரவேலு சரவணமுத்து, காரைநகர் — எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 10125-ம் இலக்க வழககில் எனக்குக் கிடைதத கோட்டுக் கட்டளைப்படி பினனுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணியை 1974-ம் ஸ்ரீ ஆடிமீ 31-ம் திகதி(31-7-74) புதன்கிழமை முற்பகல் 10 மணி தொடககம் அந்தக் காணிக்குள நின்று பிரசிதத ஏலத்தில் வறகப்படும்.

தீர்வைத்தொகை:- முதல் வட்டி ரூபாய் 2535 - 66 சதம் மேலும ரூபாய் 1500-00ககு 3—7—68 தொடக்கம 7—2—69 வரைக்கும் 8 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும இறுக்குமவரை 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபாய் 408-57 இதில் ரூபாய் 250-00 கொடுபட்டுள்ளது.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப்பகுதி காரைதீவு கோவிற்பற்று காரைதீவு மேற்கிறை "கோட்டைப்புலம" பர, நில. இலா. $7\frac{1}{4}$ (V, C) பனை மரங்கள், தென்னைகள், செய்பயிர், வான்பயிர்கள வீடுகளும் உளபட், இதற்கு எல்லை கிழக்கு:- வேலுப்பிள்ளை பெண் சவுந்தரத்துக்கும் சங்கரப்பிளளை பெண் நாகம்மாவுக்குமுரிய ஆதனம், வடக்கு: மாரிமுத்து பெண் அனனமுத்துவுக்குரிய ஆதனம, மேற்கு:- ஆறுமுகம தபபிரசாவுக்கு உரிய ஆதனம். தெற்கு: ரோட்டு இது அடங்கலும்.

167/1, கோவில் வீதி, நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம், — ப, நா. தருமலிங்கம், கோமிஷனரும், விலைமதிப்பாளரும் 96-74

---

## கூடலையாற்றூர் மேலைக்கடம்பூர் சிவத்தலங்களின் திருப்பணி

[நமது சிறப்பு நிருபர் ஸ்ரீ மா. பாலசுப்பிரமணியன், சிதம்பரம்]

தில்லையம்பதியைச் சுற்றிலும் தேவாரப் பதிகங்களால் பாடல்கள்பெற்றுள்ள 8 ஸ்தலங்கள் உள்ளன. அவைகளுள் மேலக்கடம்பூர் ஸ்ரீ வித்வத் ஜோதி அம்மை சமேத ஸ்ரீ அமிர்த கடேசுவரர் திருக்கோயில் ஒன்றாகும், இங்குள்ள ஸ்ரீசிவலிங்க பெருமானின் திருவருள் 75 ஆண்டுகளுக்கு முன்னர், மேலும் 8 ஸ்தலங்களுள் ஒன்றான கூடலையாற்றூர் திருக்கோயிலில் திருப்பணியை துவக்கம் செய்வதற்கு சுபதினம், சுபவேளை பார்த்துக் கொண்டு, தேவகோட்டையில் சிறப்புமிக்க சிவப்பணியாளரான இரட்டை அரு. அருணாசலம் செட்டியார் அவர்கள் கூடலையாற்றூர் சென்ற வரை, திருவருள் மேலக் கடம்பூருக்கு வழிதவறிவரும்படி செய்துவிட்டது. செட்டியார் அவர்கள் ஆலயத்திற்குள் சென்று தரிசனம்செய்துகொண்டு, சுபவேளையை தவறவிடாது இக்கோவிலில் திருப்பணி வேலையை துவக்கம் செய்து திருப்பணியை நிறைவேற்றி கும்பாபிஷேகத்தையும் நடத்திவைத்து, பிறகு கூடலையாற்றூர் திருக்கோவிலில் திருப்பணியையும் செய்துவைத்தார்கள்.

அப்பொழுது மேலைக் கடமபூர் திருக்கோவிலில் திருப்பணிவேலை நடைபெறும்போது பூமியின் கீழிலிருந்து உற்சவர்களான சுமார் 5 அடி உயரம் நடராஜ மூர்த்தி, சுமார் 4 அடி உயரமுள்ள அம்பாள். சுமார் 4 அடி உயரமுள்ள பிக்ஷாடனர். சுமார் $1\frac{1}{2}$ அடி உயரத்தில் நால்வர், முதலான பஞ்சலோக சிலைகள் புதையல் மூலம் கண்டெடுக்கப் பட்டன.

புராதன காலந்தொட்டு இக்கோயிலில் கருங்கல்லினுல் செய்யப்பட்டுள்ள நடராஜ மூர்த்திக்குத்தான் பூஜைகள் தினமும் நடைபெற்றுக் கொண்டும் வருகின்றது தமிழ் நாட்டில் இக்கோயிலில் தான் கற்சிலையில் நடராஜ மூர்த்தி காட்சி அளித்துக் கொண்டும் வருகின்றூர் என்பது குறிப்பிடதக்கன வாகும்.

ஸ்ரீ சிவலிங்க பெருமான் இப்பொழுது கிராம மக்களைக் கொண்டு ஜீரணோத்தாரண மகா கும்பாபிஷேகத்தை நடத்திவைக்கும்படி திருவருள் புரிந்துள்ளது, திருப்பணிக் கமிட்டி அமைக்கப்பட்டு சுமார் 35 ஆயிர ரூபாய்க்கு திட்டம் வகுக்கப்பட்டு; கிராமப் பெருமக்கள் 2 தினத்தில் ரூபாய் 10750 நன்கொடைகள் வழங்கிவிட்டார்கள்.

சிவப்பணிக்கு பொருள் உதவி செய்ய விரும்புவோர், செயலாவர், பொருளாளர் திருப்பணிக் கமிட்டி, ஸ்ரீ அமிர்தகடேசுவரர் கோயில, மேலக்கடம்பூர், ரெட்டியூர் அஞ்சல், சிதம்பரம் தாலுக்கா, தென்னிந்தியா என்ற முகவரிக்கு அனுப்பலாம்.

தில்லைவனம் என்று கூறும் சிதம்பரத்திற்கு கீழ் திசையில் சுமார் 500 ஆண்டுகளுக்கு முன்னர் அரசன் ஆளுகைக்குள், காவலராக இருந்து வந்த சாம்பான் வம்சத்தில், பெற்ருன் சாம்பான் என்பனர், முன்ஜென்மத்தில் என்ன தபோபலக்குறைவோ அதனை முன்னிட்டு நீச்சாவதாரஞ் செய்ய நேரிட்டுள்ள பெற்ருன் சாம்பான் மிகுந்த சிவபக்தியுடன் (வேப்பங் காட்டில் வில்வம் முளைத்து வளர்ந்து சொழிப்பதுபோல்) சேரியில் இல்லறத்துடன் வாழ்க்கை நடத்திக்கொண்டு, தினமும் தில்லைக்கு வருகை புரிந்து ஸ்ரீ நடராஜ மூர்த்தியின் திருக்கோயிலுக்கு வெளியில் (கீழ்வீதியில்) நின்று கொண்டு தரிசனம் செய்து

வளர்ச்சி 4-ம் பக்கம்

---

## Commission Sale

## கோட்டுக்கொமிஷன் விற்பனவுவிளம்பரம்

பருத்தித்துறை டிஸ்திறிக் கோட்டில் வழக்கு இல: 12364

கந்தப்பு சிவபாதம் கரவெட்டி மேற்கு, —வழக்காளி

எதிராக

சிதம்பரப்பிள்ளை பொன்னையா கைம்பெண் பொன்னுச்சி கரவெட்டி மேற்கு — எதிராளி

மேற்குறித்த இலக்க வழக்கில் தீர்ந்த தீர்வைப்படியும் குறித்த கோட்டால் எனககுக கிடைத்த கொமிஷன் அதிகாரப்படியும் இதன் கீழ் விபரிக்கப்படும ஆதனங்களை 1974 ஆம் ஸ்ரீ யூலை மாதம் 12-ம் திகதி(12-7-74) வெள்ளிக்கிழமை முற்பகல9-30மணிதொடககம் குறித்த ஆதனங்களிடமாகவிருந்து என்னுல் பிரசித்த ஏலத்தில் விறகப்படும்.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வடமராட்சிப் பகுதி கட்டைவேலிக் கோவிற்பற்று கரவெட்டி வதிரிக் குறிச்சியிறை "வெல்லன்" நி பர. 6 ஷை "வெல்லனுக்கு மேற்கு" நி பர. 11, 1/8 பனைகள், வடலிகள், வேம்புகள். எல்லை கிழக்கு:- தம்பையா மகள் பாறுபதிக்கும் மறுபேருக்குமுடைய வாதனம வடக்கு:- சின்னையர் கைமபெண புதியாத்தைக்கும் மறுபேருக்குமுடைய வாதனம, மேறகு:- ஒழுங்கையும், குளமும், தெற்கு:- வெல்லனில் மடத்தரும ஆதனம, இவ்வெல்லைக்குட்பட்டவை அடங்கலிற் சொரியலாய் அரைவாசியும் முற்பதிவு A 38/295 (மதிப்பிட்ட விலை 7,760)

(2) மேற்படி கரவெட்டி வென்றிக் குறிச்சியிறை "அங்குடுதுர்" கதிர்காமர் கந்தரின் பெயரில் இத்தோமபு முற்பதிவு செய்யப்பட்டது. ரெ. பர. 24 எல்லை கிழககு:- எதிராளியின் ஆதனம், வடககு:- கந்தன நாகனிஞதனமும் எதிராளிக்குரியய வாதனமும், மேற்கு:- மாட்டதர், தெற்கு:- முருகர் சிதம்பரநாதரிஞதனம், இவவெல்லைக் காணியிற் சொரியலாய் நாலிலொரு பங்கும. முற்பதிவு: A. 38/297 (மதிப்பிட்ட விலை ரூபா: 1,200/-)

| | | |
|---|---|---|
| தீர்வைத்தொகை: | ரூபாய் | 2,737 50 |
| வட்டி ரூபா 2000/-க்கு 10 வீதப்படி $4\frac{1}{2}$ மாதஙகளுக்கு | ரூபாய் | 74 97 |
| வட்டி ரூபா 2812-47க்கு 5 வீதப்படி 6 மாதங்களுக்கு | ரூபாய் | 70 30 |
| வட்டி ரூபா 2,882-77க்கு 5 வீதப்படி 22-5-74 தொடக்கம விற்பனை வரை | ரூபாய் | 20 01 |
| கோட்டுச் செலவு | ரூபாய் | 225 30 |
| மொத்தம் | ரூபாய் | 3,128 08 |

ந. முத்துலிங்கம்
நீதிமன்ற ஆணையாளர், விலைமதிப்பாளர் ஏல விற்பனையாளர்
(தேசிய வீடமைப்புத் திணைக்களம)

குமரசோட்டம்' வியாபாரிமூலை, பருத்தித்துறை. 21-6-74

87, 28 - 6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆறுமுக நாவலர் பெருமான் வகுத்தது - வேத சிவாகம நெறியே

சட்டத்தரணி திரு. இ. நமசிவாயம் அவர்கள்
(தனுதிகாரி; திருக்கேதீச்சரப் புனருத்தாரண சபை)

முற்றொடர் - 4.

இன்று தமிழ் மக்கள் வாழும் நாடுகளில் பல்லாயிரக் கணக்கான திருக்கோயில்களும் அவற்றைச் சார்ந்து நிலவிவரும் அருங்கலைகளும் இலக்கியங்களும் நெறிமுறைகளும் பிறவும் எல்லாம் தோன்றி வளர்வதற்கு நாயன்மார்களாகிய நால்வர் பெருமக்களே காரணம்.

தமிழ் மக்கள் மத்தியில் தோன்றியருளிய அருட்பெருஞ் சான்றோர்கள் அளவிலராவர். சித்தாந்த சைவத்தின் சமய ஆசாரியர்களாயுள்ள அப்பர், சம்பந்தர், சுந்தரர், மணிவாசகர் என்னும் நால்வர் பெருமக்கள் இவ்வருட்பெருஞ்சான்றோர் அனைவருக்குமே தலை சிறந்தவர்கள் இவர்கள் "தமிழில் வழி கண்டவர்கள்".

"ஆறதே றும்சடை யான் அருள்
மேவ அவனியர்க்கு
வீறதேறும் தமிழால் வழி
கண்டவன், மென் கிளிமாங்
தேறல் கோதித் தாறு சண்பகம்
தாவிச் செழுங்கமுகின்
தாற தேறும்பொழிற்
சண்பையர்
காவலன் சம்பந்தனே"
—நம்பியாண்டார் நம்பிகள்

"தமிழ் ஞானசம்பந்தன்" என்னும் தொடர், சிவநெறித் தலைவராகிய திருஞானசம்பந்தப் பெருமான், தமமைத் தாமே பெருமிதமுறையாற் குறித்துக்கொள்ளும் ஓர் அழகிய இனிய தொடராகும். "தமிழ்ப் பரப்பும் ஞானசம்பந்தன்" என சுந்தரர் திருஞானசம்பந்த மூர்த்தி நாயனாரை சிறப்பித்துள்ளார்.

ஆகவே இவர்கள் காட்டிய இயல்பான வழியிருக்க நாம் அன்னிய வழிகளை நாடுவது எமது தமிழ் மரபிற்கு ஒவ்வாதது. சைவமும் தமிழும் ஒன்றினொன்று வேறு பிரிக்க முடியாதவை, எனவே, தமிழர்கள் சைவ நெறியினையும், சைவநன் மக்கள் தமிழினையும் தமது உயிரினும் இனிதாகப் போற்றி ஓம்பும் இன்றியமையாப் பெருங்கடமையுடையராதல் வேண்டும்.

நம்மவரில் சிலர் தம்மைச் சிவநெறியாளர் தமிழர் என்று கூறி கொள்ளுகின்றனராயினும், சைவம் வாழ்ந்தாலன்றி தமிழ வாழ்தல் இயலாது என்னும் உண்மையை உணராதவராயிருக்கின்றனர். இவர்கள் தமிழ் மக்களின சைவ சமய நிலையைக் குலைத்தற்கு எத்தனிக்கும சக்திகளுக்கு ஒத்து உதவுபவராயிருந்து வருகின்றனர். இந்த வகையில் இன்று சான்று நிகழ்ச்சியாயுள்ளது. சைவ மாணவர்களில் ஏழாம் வகுப்புக்கான "சைவ சமயப் பாடத்திட்டத்துள்" அண்மையில் திணிக்கப்பட்டுள்ள சில பகுதிகளே. இவை சைவ சமயக் கோட்பாடுகளுக்கு எவ்வித இயைபுமில்லாதவை.

இன்னும் இந்து சமயத்திலுள்ள பல்வேறு கொள்கைகளையும் சார்ந்து வாழையடிவாழையாகத் தோன்றிய அருளாளர்கள் எண்ணற்றவர்களாவர், இந்நிலையில் இந்துசமயத்தின் உட்பிரிவுகளில் ஒன்றைச் சார்ந்த அருளாளராயுள்ளவர் ஒருவரின் அல்லது ஒரு சிலரின் வாழ்க்கை வரலாறுகளை சித்தாந்த சைவமான சமூகத்திலுள்ள மாணவர்க்குரிய பாடத்திட்டத்துள் அச்சமூகத்தின் விருப்பத்திற்கு மாறாக ஒருசிலரால் திணிக்கப்பட்டது முறையற்ற செயலாகும்.

அடுத்து மகாயனம், ஈனயானம் எனப் பௌத்த சமயத்தில் இரு சமயப் பிரிவுகள் இருத்தலை யாவரும் அறிவர். இப் பிரிவுகள் சமய ஒழுக்க முறைகளையும் தத்துவ விளக்கங்களையும் சார்ந்தவை. நம் ஈழத்தின்கண் பொதுவாக இந்துக்களென்று கூறப்படும் தமிழ் மக்கள் சைவ சமயத்தவர்களே. இவர்கள் ஆகம விதிப்படி கோவில் வழிபாடு தேவார திருவாசகம் முதலிய பன்னிரு திருமுறைகள், தீட்சை பெறுதல் ஆகியவற்றை இன்றியமையாத கோட்பாடுகளாய்க் கொண்

(வளர்ச்சி 4-ஆம் பக்கம்)

# நாவலர் நெறியில் ஒழுகிய பெரியார்

தமிழ்ப் பண்டிதரும், இயற்றமிழ்ப் போதகாசிரியரும், புராண படன விரிவுரையாளருமாய் வாழ்ந்த யாழ்ப்பாணம் இருபாலை திரு. மு. வேதாரணியர் அவர்கள் தமது வாழ்நாளைச் செந்தமிழ் வளர்ச்சிக்கும் சைவ சமய நெறி வளர்ச்சிக்குமாகச் செலவிட்ட ஒரு பேரறிஞர்; இவரது குலம் தோப்புத்துறைச் செட்டிமார் எனப்படும் சைவ வேளாளர் குலம்; சிவ காளையார் கோத்திரம். இவருடைய தந்தையார் இருபாலை - திரு: வை. முத்துக்குமாரு என்பவர். தயார் கந்தர்மடம் - சேதுப்பிள்ளை: இவர் தமது தந்தையாரைப்போலவே தமிழிலக்கண இலக்கியங்களிலும் சைவ சமய சாத்திரங்களிலும் கல்வியறிவு நிரம்பியவர்.

கி. பி. 1900:ஆம் ஆண்டில் வண்ணார்பண்ணை நாவலர் சைவப் பிரகாச வித்தியாசாலையில், அதன் தரும பரிபாலகராயிருந்த ஸ்ரீமத். த. கைலாசபிள்ளை அவர்கள் தமிழ்ச் சங்கம் ஒன்றினை நிறுவினர்: சங்கத் தலைவராகப் பிள்ளை அவர்களே தெரிவு செய்யப்பட்டனர். அதிகார புருடரும் சைவ சித்தாந்தப் பிரசாரகருமாகிய கொக்குவில் திரு சி. சபாரத்தினமுதலியார் சங்கக் காரியதரிசியாகவும், புலவர் ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை, வட்டுக்கோட்டை ஆறுமுக உபாத்தியாயர், நல்லூர் வே. கனகசபாபதி ஐயர், ஊரெழு சு. சரவணமுத்துப் புலவர் என்னும் ஐவரும் சங்கத்தின் வித்துவ அங்கத்தினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இச் சங்கம் பிரவேச பரீக்ஷை, பால பண்டித பரீக்ஷை, பண்டித பரீக்ஷை என்பவைகளைத் தமிழில் நடாத்தி, அவற்றிற் சித்தியடைந்தோர்க்குப் பரிசும் பட்டமும் வழங்கியது. சுன்னாகம் திரு. அ. குமாரசுவாமிப் புலவர் இச் சங்கத்தின் முக்கிய பரீக்ஷகராகவும்: விஷய ஆலோசகராகவும் இருந்து சங்க முன்னேற்றத்துக்குப் பெரிதும் உழைத்தனர்: இச் சங்கத்தின் நிகழ்ச்சி முறைகளை முன்மாதிரிகையாகக்கொண்டே திரு. பொ. பாண்டித்துரைத் தேவர் அவர்கள் மதுரையிற் றமிழ்ச் சங்கமும் பண்டித பரீக்ஷையாதியனவும் நிறுவி நடாத்துவாராயினர் என்ப.

யாழ்ப்பாணத்துத் தமிழ்ச் சங்கத்தால் பண்டித பரீக்ஷையாதியவற்றிற்கு நியமிக்கப்பட்ட பாடத் திட்டத்தின்படி கல்வி பயிற்றுதற்குரிய வகுப்புக்களும் வைத்து நடாத்தப்பட்டன: அதிற் சேர்ந்து திரு மு. வேதாரணியரும் கல்வி பயின்று பண்டிதப் பட்டம் பெற்றவராயினர். பண்டிதர் பிரம்மஸ்ரீ வ. மு. இரத்தினேசுவர ஐயரும் இவரோடு கற்ற ஒரு சாலை மாணாக்கருள் ஒருவரே.

இத்தகைய வித்தகர் உரிய காலத்தில் சமய தீக்ஷை விசேட தீக்ஷைகளைப் பெற்று ஆன்மார்த்த சிவபூசா துரந்தரராகவும் வாழ்ந்தனர். தம் உறவினராய் அக்காலங் கொக்குவிலில் வாழ்ந்த 'இராசம்மா'வை முதலில் மணம் புரிந்து 'கந்தசாமி' என்ற புதல்வரும் வாய்க்கப் பெற்றார். அம் மனைவியார் காலஞ் சென்ற பின்னர் அவ் வூரிற்றானே வாழ்ந்த 'அமிர்தம்மா' என்பவரைத் தரும பத்தினியாக மணந்து இல்லறக் கடமைகளை நடாத்தி வாழ்வாராயினர்.

வேதாரணியர் அவர்கள் புராண படனங்களுக்கு விரிவுரைகளைச் சபையில் அலங்கார நடை பொருந்தச் செய்யும் ஆற்றல் பெற்று விளங்கினர், திருவாதவூரர் புராணம், கந்தபுராணம், திருவிளையாடற் புராணம், பெரிய புராணம். காசி காண்டம் முதலாய பலவற்றுக்கு விரிவுரை நிகழ்த்தினர்: யாழ்: சைவ பரிபாலன சபைச் சார்பிலும் பல வருட காலம் புராண படன விரிவுரை நிகழ்த்தினர், மேலும் இவரிடம் தனிப்பட்டமுறையில் உயர்தரப் பரீக்ஷைகளுக்கும் தமிழ்க் கல்வியறிவிற்குமாகக் கற்ற முதியவர்களும் இளைஞர்களுமாகிய மாணவர்களும் மாணவிகளும் பலருண்டு.

தமக்குப் பேரப்பிள்ளைகளும் வாய்க்கப் பெற்று, அவர்களுட் சிலர் குடும்பஸ்தராகி வாழவும், எல்லாரும் தமக்குத் தொண்டு புரிந்து போற்ற யாதொரு குறையுமிலராய்த் திருப்தியுடன் வாழ்ந்த இந்தப் பெரியார் சில மாசமாக நோய் வாய்ப்பட்டு வெளியே சென்றுலாவுதலொழிந்து இல்லத்தமர்ந்து வாழ்வாராயினர், அக் காலங்களில், இவர் தேவாரம் திருவாசகம் முதலிய திருமுறைப் பாடல்களிலும் அவற்றின் பொருட் சிறப்புக்களிலும் ஈடுபட்டுச் சிவ சிந்தை சிவத்துதிகளோடு பொழுதுபோக்கியதை நேரிற் காண நேர்ந்தது. இவருக்கு இப்போது வயது 90 என்பதும் அறியலாயிற்று. தீர்க்க ஆயுளுடன் திருப்திகரமான வாழ்வும் இம்மைக்கும் மறுமைக்குமுரிய புகழும், புண்ணியமும் சம்பாதித்து நிறைவெய்தி மனச் சாந்தியும் பெற்ற இப் பெரியார், விதி வயத்தால் நிகழும் ஆனந்த வருஷம், வைகாசி மாசம், 30 - ஆம் உ (13-6-1974) வியாழக்கிழமை, கிருஷ்ண பட்சத்து அட்டமித் திதியிலன்று பகல் 1-30 மணியளவில் சிவபதமடைந்தனர்.

"உறங்குவது போலுஞ் சாக்கா டுறங்கி
விழிப்பது போலும் பிறப்பு"

என்ற பொய்யாமொழியாகிய திருவள்ளுவர் வாக்கின்படி, உலகுயிர்களுக்குப் பிறப்பும் இறப்பும் மாறி மாறி நிகழுங் காரியமாகிய உலகியற்கை என்பதை உணர்ந்தும், ஆரா அன்பினால் வருந்துறும் குடும்பத்தவரும் சுற்றத்தவரும் நண்பருமாகிய நாமெல்லாம் இனி அவர் நற்கதி பெறுதற்குரிய பிதிர்க் கருமம் முதலிய கடமைகளையாற்றி, அவருடைய ஆன்மா சாந்தியுறச் செய்யும் கருமங்களைத் திருவருளை முன்னிட்டுச் சிரத்தையுடன் செய்து, 'எல்லாம் வல்ல இறைவனை அருளும்படி வேண்டிச் சாந்தி பெறுதல் தவிர, வேறு செய்யலாவது ஒன்றுமில்லை' என்பதை நினைவுகூரக் கடவோம்.

465/1, கே. கே. எஸ். வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

வித்துவான் ந. சுப்பையபிள்ளை
23-6-1974

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வழ. இல. M. B. 13354

(1) க. சண்முகமும் (2) பெண் கனகசுந்தரியும்
இருவரும், காரைதீவு கிழக்கு —வழக்காளிகள்

எதிராக

(1) கணபதிப்பிள்ளை சுப்பிரமணியம்
(2) பெண சிவபாக்கியமும், இருவரும் விழானை, காரைதீவு கிழக்கு. காரைதீவு —எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 13354ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைதத கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும 3 துண்டுககாணி 1974ம் வரு ஆகஸ்ட் மீ 5-ம் திகதி (5-8-74) திங்கட்கிழமை முற்பகல் 10-00 மணி தொடக்கம் அந்தந்தக் காணிகளுக்குள நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: ரூபா 6,750/- பின 1974ம் ஆண்டு புரட்டாதி மாதம் 6ம் திகதி தொடககம 1973ம் ஆண்டு சித்திரை மாதம் 10ம் திகதி வரை ரூபா 5,000/-க்கு 12 வீத வட்டியும பின் முழுத்தொகையும இறுபடும் வரை 5 வீத வட்டியும கோட்டுச செலவு ரூபா 513/-

### ஆதன விபரம்

(1) வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப் பகுதி காரைதீவு கோவிற்பற்று காரைதீவு மேற்கு இறை 'தம்பன' நெ. ப. 8½ எல்லை கிழக்கு:- மாககண்டு கைம்பெண் சுந்தரம்மாவுக்கும் ஆறுமுகம் குமரேசுவுக்கும் பங்காளருக்குமுரிய ஆதனங்கள், வடக்கு:- விசுவநாதர் முருகேசுவின் ஆதனம, மேற்கு:- இராமநாதர் விநாசித்தம்பியின் உரித்தாளரின் ஆதனம, தெற்கு:- சின்னப்பு பெண தெய்வானையினுதனம். இது அடங்கலும் இதன் வடக்கெல்லைக் காணியில் தென் கிழக்குப் பககமாகவிருக்கும் கிணற்றில் இதற்குரிய பங்கும். இறைவாய்க்கால் உருத்தும.

(2) மேற்படி கிழக்கு இறை இலட்சிங்கதேவன்புலம் நி பர. 25 இதில் மேற்குப் பககமாக அறுதியாக விற்ற நி. பர 12 நீக்கி மிகுதி நி. பர. 13 பனைகளும் எலலை கிழக்கு:- கந்தையா சுப்பிரமணியத்தினுதனம், வடக்கு:- சின்னததம்பி கந்தையாவின் மகனினுதனம, மேற்கு:- வாய்க்கால, தெற்கு:- சுப்பிரமணியம் பெண் சிவபாக்கியத்தினுதனம். இது அடங்கலும்.

(3) மேற்படி கிழக்கு இறை இலட்சிங்கதேவன்புலம் நி. பர. 25 இதில மேற்குப் பககமாக அறுதியாக விற்ற நி பர. 12 நீக்கி மிகுதி நி. பர. 13 எல்லை கிழககும வடக்கும்:- கனகசபை திருநாவுககரசுவினுதனம், மேற்கு:- கந்தையா கைம்பெண் பாக்கியததினுதனம, தெற்கு:- ஒழுங்கை இது அடங்கலும.

"விதானை வளவு"
சித்தன்கேணி, 19-6-74.

சி. செ. ம[illegible]
கொம்மிசனரும் விலைமதிப்பாளரும் [illegible]

89, 826-

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வழ. இல. M. B 10696

காங்கேசன் துறை
அருணாசலம் வல்லிபுரம் — வழக்காளி

எதிராக

சாங்கேசன் துறை
(1) குருநாதபிள்ளை நடராசா பெண்
(2) செல்வரெத்தினம் — எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 10696 ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப் படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணியை 1974 ம் ஆடி ஆடி மீ 19 ம திகதி (19-7-74) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும.
தீர்வைத்தொகை:-

முதல் வட்டி ரூபாய் 1250/-ம், 23-3-69 தொடக்கம் 12-11-69 வரைக்கும் ரூபாய் 1,000/-க்கு 10 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைககும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 337-15 இதில் தீர்வைக்குப் பின்பு 1000/- கொடுபட்டுள்ளது

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்குப் பகுதி தெல்லிப்பளை கோவிற்பற்று பளை இறை "சிலம்பி வளவு" பர. நில. இலா 4 இதில் மத்தியில் பர. நில. இலா, 0 குளிகள் 9 கல்வீடும் இதற்கு எல்லை கிழக்கு:- கந்தையா பெண் பூரணத்திற்கும் மற்றவர்களுக்குமுரிய ஆதனம, வடக்கு; ஒழுங்கை, மேற்கு;- நரசிங்கம் பொன்னையாவுக்குரிய ஆதனம். தெற்கு;- இராமு செல்லககண்டுவுககுரிய ஆதனம். இதடங்கலும்.

நா. ஸ்ரீ இரங்கநாதன்
கொமிஷனர்&விலைமதிப்பாளர்,
[illegible]

88 28-6

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவராயினர் வீழ்கதண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.
திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

ஆனந்த ஞு ஆனி மீ கச-உ வெள்ளிக்கிழமை [1974]

# உடை நடை பாவனைக்கோர் மாற்றம் வேண்டுமா?

தொன்மைக்கொரு தூய்மையுண்டு, தொடர்ச்சிச் சிறப்புண்டு; தொல்லுலக மரபுண்டு. இவ்வகையான் எழுகின்றது பாரம்பரியப் பண்பு; அவ்வாறே அமைகின்றது மக்கள் வாழ்வு. நெறி இனம் மொழி மதம் இலக்கியம் என்றவையெல்லாம் பண்டுள பண்பின் பாலுள்ளன; தொன்மையைத் தொட்டே தொடர்ந்து நிலவுகின்றன. சமயம் இனத்தையும், மதத்தையும் தழுவும். எனவே இவை யாவும் ஒருங்கமைந்த பரம்பரை மரபு விளங்குகின்றது. ஆகவே, இம் மரபுநெறியில் மாற்றங்களைப் புகுத்துமுன் தொன்மைக்கிழுக்கு நிகழாவண்ணம் கவனம் எடுத்தல் அவசியமாகும்.

உடை நடை பாவனையென்ற முறைக்கும் பழமை நெறியுளதாகும். அம்முறையில் மாற்றம் வேண்டுமா? என்றும், வேண்டுமெனின் எவ்வாறேற்றல் என்றுமாராய்தல் அவசியமாகும். உடை, நாட்டுக்குரிய முறையில் உளதென்பது உலக வழக்கு. ஆடை அமைப்பைத் தழுவியே நடை என்ற ஒழுக்க நெறியும் பாவனையெனும் பழக்கமும் அமைவன. ஆலயங்களுக்கு வழிபடச் செல்லும் பத்தர்களும் ஆங்கு தொண்டாற்றும் அன்பர்களும் அலங்காரமாக ஆடை அணிவது முறையன்றென்ற கொள்கை தொன்மையுடையது. எனவே, அந்நெறியை மாற்றத் துணிவதே மத ஒழுங்குக்கு மாறாகக் கருதப்பெறும். ஆகையினால், சமயிகளின் உடை ஒழுங்கு எவ்வாற்றானும் மாற்றியமைக்கப்பெற வேண்டியதில்லையென்பது துணிபு.

இவ்வாறே ஏனையவை யாவும் எவ்வகையாலும் புதுமைப் புரட்சிக்குள்ளாக வேண்டியதில்லை. உணவு வகையிற் புனித ஆகாரமே பொருத்தமானதும், சமயாசாரத்துக்குரியதும் ஆகும். இக்காலத்தில் மேனாட்டு உணவு முறையை உபசார வைபவங்களிற் பலர் கையாளுகின்றனர். உடையிலும் ஏனைய நாட்டுடை முறையைப் பின்பற்றுகின்றனர். இது இனத்துக்கு இழுக்கு.

செந்தமிழ்கூறும் தேசங்களிலும், சைவ சமயிகள் வாழும் நாடுகளிலும் உள்ளவர்கள் பழைமைப் பண்பிலிருந்து இழையளவும் விலகவேண்டியதில்லை. விதியுமாகாது.

○ ✳ ○

## ஞானமென்பது மோனவரம்பு

கைலாச மலையில் ஒரு சர்வகலாசாலை. அங்கு கூட கோபுரங்களையும் மாட மாளிகைகளையும் கொண்ட கட்டடங்கள், விஞ்ஞான கூடம், விளையாட்டு மைதானம் முதலிய சாதனங்களில்லை. பாடசாலை ஒரு கல்லால விருக்ஷம், ஆசிரியர் ஒரு வாலிபர் - அவர் தக்ஷிணாமூர்த்தி.

மாணவர் நால்வர் - சனகர், சனந்தனர், சனாதனர், சனற்குமாரர். இவர்கள் வேதம், ஆகமம் முதலிய சாத்திரங்களையும் கற்றுச் சரியை, கிரியை, யோகம் ஆகிய மூன்று பாதங்களையும் உணர்ந்துவிட்டார்கள். நான்காம் பாதமாகிய ஞானம் கைகூடவில்லை. மாணவர்கள் கல்லாலின்கீழ் வீற்றிருந்த ஆசிரியரை அணுகி, "சுவாமி! சகல சாத்திரங்களையும் கற்றுணர்ந்தோம். ஆனால் ஞானம் கைகூடவில்லை. ஞானத்தை உபதேசித்தருளல் வேண்டும்" என விண்ணப்பித்தார்கள். தக்ஷிணாமூர்த்தி "வேத சிவாகமங்கள் முதலிய சாத்திரங்களைக் கற்றுணர்வதால் ஞானங் கைகூடுவதன்றெனத் திருவாய்மலர்ந்து அவர் கல்லாலின் அடியில் நிஷ்டைகூடி தென் முகமாக வீற்றிருந்து ஒரு திருக்கரத்தைத் தமது மார்பிலே அணைத்த வண்ணம் மற்றைத் திருக்கரத்தினால் சின்முத்திரையைக் காட்டிக்கொண்டு கணம் மௌனமாகவிருந்தனர். மாணவர்களுடைய சந்தேகம் நீங்கிற்று. அவர்கள் பூரண ஞானத்தையடைந்தார்கள். வடமொழியிலுள்ள தக்ஷிணாமூர்த்தித்தோத்திரமொன்று அவருடைய உபதேசத்தை நயமாக விளக்குகின்றது.

"ஆசிரியர் ஒரு வாலிபர், சீடர்கள் வயோதிபர்கள், அவருடைய உபதேசம் மௌனம், உபதேசத்தின் பேறு அவர்களுடைய சந்தேகம் நீங்கப்பெற்று அவர்கள் பூரண ஞானத்தை யடைந்து விட்டனர்' என்பதாகும்.

இவ்வுபதேசத்தைப் பரஞ்சோதி முனிவர் தமது திருவிளையாடற் புராணமென்னும் நூலில் அழகாக விளக்குகின்றனர்.

கல்லாவின் புடையமர்ந்து நான்மறைய றங்கமுதற் கற்றகேள்வி
வல்லார் ணல்வருக்கும் வாக்கிறந்த பூரணமாய் மறைக்கப்பாலாய்
எல்லாமா யல்லதுமா யிருந்ததனை யிருந்தபடி யிருந்து காட்டிச்
சொல்லாமற் சொன்னவரை நினையாம னினைந்துபவத் தொடக்கை
வெல்வாம்.

வடமொழிச் சுலோகத்தில் மௌனம் வியாக்கியாமைர் என்று சொல்லப்பட்டிருக்கின்றது. பரஞ்சோதி முனிவர் எக் கருத்தினை "சொல்லாமற் சொல்லி" என்ற சொற்றொடரினால் விளக்குகின்றார். தக்ஷிணாமூர்த்தியினுடைய உபதேசம் மௌனம் என்பது தெற்றென விளங்கும்.

மௌனம் அருள்வழியைக் காட்டும். அது சதா பிரவிருத்தி மார்க்கத்தில் ஈடுபட்டிருக்கும் மனத்தை நிவிர்த்தி மார்க்கத்தில் செலுத்தும். இந்த மௌன நிலை கைகூடுவது மிகக் கஷ்டம். "சும்மாயிருக்கின்ற திறம் அரிது காண்" எனத் தாயுமான சுவாமிகளும் கூறுகின்றனர்.

நான் நினைக்கின்றேன், நான் செய்கின்றேன், நான் அறிகின்றேன் என்ற அகங்கார மமகாரங்களை யறுத்து பதிஞானத்தினால் பதியையறியத்தலைப்படல்வேண்டும். இக்கருத்தினையே மாணிக்கவாசக சுவாமிகளும், "அவனருளாலே அவன்தாள் வணங்கி' எனத் திருவாய் மலர்ந்தருளினார். இந்த மௌன நிலையே திருவடி ஞானம். அத திருவடி சிந்திப்பதரியது, சிந்திப்பவர்க்கு சிறந்த தேனைப் போல இனிக்கும். பழவினைகளை அறுக்கும், முத்தியைத் தரும். மௌன நிலை - ஞானத்தை அருளும். ஞானம் - வீட்டு நெறியை உதவும். மக்கள் மௌன சாதனை செய்தல் வேண்டும். ஆலயங்களில் அடியார்கள் பஞ்சாட்சர செபஞ் செய்தலுடன மௌன தியானத்தையும் கொள்ளுதல் நன்று.

## கூடலையாற்றூர் மேலைக்கடம்பூர்...

2 ஆம் பக்கத்து வளர்ச்சி

கொண்டு வெளியே வரும் சிவனடியார்களைக் கண்டு மனங்கசிந்துருகி பயபக்தியோடு சிரமேற் கைகூப்பி நமஸ்காரம்செய்து கொண்டு சேரிக்குச் சென்றுகொண்டிருந்தார். ஒருநாள் தரிசனம் செய்துகொண்டு சேரிக்குப் போகும்போது, பெற்றான் சாம்பான் முன் பிறவியில் என்ன பாவஞ் செய்தேனோ இந்த நீசப்பிறவிப் பெற்று திருக்கோயிலுக்குள் புகுந்து தெரிசிக்க முடியாது ஆகிவிட்டேனே என்று பலவாறாகவருத்தப்பட்டுக்கொண்டு செல்லும்போது. இப்பிறவியிலாவது ஓர் பணிவிடை செய்துகொண்டு வந்தால், மறுபிறவியிலாவது நற்கதியை யடையக்கூடாதா வென்று நினைத்து, நாம் செய்யத்தக்க பணிவிடை யாதென்று யோசித்து, விறகு கொண்டுவந்து தினமும் போட்டுவந்தால், ஸ்ரீ நடராஜமூர்த்திக்கு நிவேதனம் வைப்பதற்கு உபயோகப்படமாட்டாதா யென்று மனதில் உறுதியாக கருத்துக்கொண்டு, காட்டிற்குச் சென்று விறகுவெட்டி சக்திக்கு ஏற்றபடி கட்டிக்கொண்டுவந்து. கீழைச்சந்நிதிக்கு எதிரில் பூமியின் இறக்கிவைத்துவிட்டு நின்றுகொண்டிருக்கும் போது, திருக்கோயிலிருந்து ஓர் பிராமணர் வெளியே வந்து பெற்றன் சாம்பானைப் பார்த்து விறகுகட்டு விற்கிறதாவென்று கேட்க பெற்றான்சாம்பான் பிராமணப் பிள்ளையைப் பார்த்து விற்கிறதில்லை, நடேசப் பெருமானுக்கு தினமும் விறகு பணிவிடை செய்துவரவேண்டுமென்று எண்ணங்கொண்டு இன்று விறகுக்கட்டு கொண்டுவந்தேன், இதை சுவாமிகளுக்கு நிவேதனம் வைப்பதற்கு உபயோகப்படுத்திக் கொள்ளும்படி தெரிவிப்பதோடு, இந்த விறகுக்கட்டை மடப்பள்ளிக்குள்ளே சேர்ப்பித்துவிடவேண்டுமென்று வணக்கமாய் பெற்றான்சாம்பான் கூற, பிராமணப்பிள்ளை இந்த நீசனுடைய மனதில் பெரும்பக்தி ஏற்பட்டு விறகு கட்டு கொண்டுவந்திருப்பதை வியந்தது.

(வளரும்)

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்.

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன் துறை வீதி, 450ம் இலக்கத்திலுள்ள சைவப்பிரகாச அச்சி யந்திரசாலையில், 28—6—1974 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

பிரதம ஆசிரியர் : திரு. நம. சிவப்பிரகாசம்
ஆசிரியர் : திரு. மூ. மயில்வாகனம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சங்காபிஷேகம்

முளங்காவில் விக்கினேஸ்வரப் பெருமானுக்கு வழமை போல சங்காபிஷேகம் 2-6-74 அன்று சிறப்பாக நடைபெற்றது.

திருக்கேதீஸ்வரம் பிரதம குருக்கள் பிரம்மஸ்ரீ எஸ் காளாஸ்திரிக்குருக்கள் அவர்கள் பிரதம குருவாக இருந்து நடத்தினார்கள். பன்னூற்றுக் கணக்கான அடியார்கள் வந்து தரிசனம் செய்தார்கள்.

## பனை ஓலைச் சார்வு

பனை ஓலைச் சார்வைப் பணங் கொடுத்து வாங்குவதற்கு யாழ்ப்பாணம் மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகத்தினர் முன்வந்துள்ளார்கள். அவர்களின் தேவைக்கேற்றளவை வழங்கக் கூடியவர்கள், அவர்களுடன் நேரடியாகத் தொடர்பு கொள்ளும் வண்ணம் கேட்கப்படுகின்றனர்.

பனை ஓலைச் சார்வுக்கு யாழ்ப்பாண குடா நாட்டில் பெருந்தட்டுப்பாடு ஏற்பட்டிருப்பதே இந்நிலைக்குக் காரணம் என்று கூறப்படுகின்றது.

## ஆறுமுக நாவலர்

3-ஆம் பக்கத்து வளர்ச்சி

டுள்ளார்கள். மேலும், முழுமுதற் பொருளாகிய இறைவனை ஓர் உருவத்தில் வழிபடும் முறையை கடைப்பிடிக்கிறவர்கள். இதை "திருக்கோயில்மதம்" என்றே சொல்லலாம்.

இலங்கை வாழ் பௌத்தர்கள் தமக்குத் தனிச் சிறப்பாகவுள்ள ஈனயான சமயக் கொள்கையினையும் சிங்கள மொழியினையும் நிலைகுலையாத வண்ணம் உயிரிலும் பெரிதாகப் பேணிவருகின்றனர். சித்தாந்த நெறியினைப் பின்பற்றும் தமிழ்பேசும் சைவ மக்களாயுள்ளவர்களும் அவ்வண்ணம் சைவத்தையும் தமிழினையும் பாதுகாத்து வருதல் இன்றியமையாத முக்கிய கடமையாகும். இச்செயல் தமிழர்களல்லாத இந்து மக்களுக்கு எவ்விதக் கேடும் விளைவிக்காது சித்தாந்த சைவம் ஆறுமுகநாவலர் பெருமான் எமக்கு வகுத்த நெறியாகும்.

## மது ஒழிப்பு இயக்கம்

புங்குடுதீவு இளைஞர் மதுஒழிப்புக் கழகம புங்குடுதீவில் மதுவின் தீமையைப்பற்றிப் பிரசாரம செய்யவும் 12 வட்டாரங்களிலும் காந்தியடிகள் வழியில் உண்ணா விரதம் அனுட்டித்து மது ஒழப்பை நடத்தவுந்தீர்மானம்செய்துள்ளது

சிவ சொத்து

"தமக்குரிமையில்லாத பொருளை நாவலர் மனத்தாலும் தீண்டார். பிறரும் சுயநலத்துடன் அபகரிப்பதைக் கண்டிப்பார், முதன்மையாக, சிவ சொத்தை எவராயினும் துர் விநியோகஞ் செய்தாலும், சுய நலத்திற்காக அபகரித்தாலும் பலமாகச் சண்டை போட்டு அதைச் சிவார்ப்பணமாக்குவார்.

ஆறுமுக நாவலர்.